Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் 389

National Tamil Daily

இதழ் 59
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 27 ஜுல்ஹஜ் 29 திங்கட்கிழமை [10-4-67]

முக்கிய அறிவித்தல்

விளம்பரம் செய்வதை தற்காலிகமாக நாங்கள் நிற்பாட்டியிருப்பதால் தயவு செய்து அன்பர்கள், ஆதரவாளர்கள் எவரும் விளம்பரத்திற்கென வந்து சிரமம்தர வேண்டாம் என்று மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

அதிபர்

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

வல்வெட்டித்துறை சம்பவ எதிரொலி

# பிரதமரிடம் நேரில் பேச எம். பி. க்கள் பயணம்

## விபரமான அறிக்கை தரும்படி ஐ. ஜி. பி. க்கு டட்லி உத்தரவு

### மக்கள் அமைதியாக இருக்க தலைவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறையில் நேற்று முனதினம் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோக சம்பவம் குறித்து பிரதம மந்திரியுடன் நேரில் தெரிவித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி கோருவதற்காக நேற்று மாலை நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனும், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் கொழும்புக்கு புறப்பட்டு போனார்கள்.

இதற்கிடையில் வல்வெட்டித்துறையில் மரணமான இளைஞனின் சடலத்தைப் பார்ப்பதற்கு வந்திருந்த சனக்கூட்டத்தை பொலிசார் கட்டுப்படுத்த முனைந்தபோது பொதுமக்கள் அமைதியிழக்கும் சூழ்நிலை ஒன்று ஏற்பட்டது. அங்கு வந்திருந்த எம். பி. க்கள் அமைதியை இழக்காதிருக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்ளநேர்ந்தது. இதற்கிடையில் வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த சம்பவங்கள் பற்றித் தமக்கு இன்று காலைக்குள் விபரமான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலை பிரதமர் திரு. டட்லி சேனநாயகா கேட்டிருக்கிறார். வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் நடந்த சம்பவங்களுக்கு வல்வெட்டித்துறையில் முகாமிட்டுள்ள இராணுவமே மூல காரணமென்றும் இராணுவத்தின் நடவடிக்கைகள் பற்றியும் நேற்று முன்தினம் நடந்த சம்பவங்கள் பற்றியும் விசாரணை செய்வதற்கு கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டுமென்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பிரதமரைக் கோரியுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் மாண்ட சிவஞானசுந்தரம் என்ற இளைஞரின் மரணம் பற்றி பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார். இந்த விசாரணையில் பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டன்ட் லியனகே ஆகியோரும் மற்றும் பலரும் சாட்சியமளித்தனர். பிரேத பரிசோதனையும் நடைபெற்றது.

நேற்று முன்தினம் மாலை பொதுமக்கள் நிறைந்த கூட்டமொன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இளைஞர் ஒருவர் மரணமானார் [மூவர் அல்ல] மற்றும் காயமடைந்த 11 பேரில் எட்டுப் பேர் மந்திகை ஆஸ்பத்திரியிலும், 3 பேர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் இருவர் நிலை கவலைக்கிடமானதாகவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

## விசாரணைக் கமிஷன்வேண்டும்: எம். பி.க்கள் கோரிக்கை

வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் மிக மோசமானதென்றும் இதுபற்றிப் பகிரங்க விசாரணை நடத்த ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமென்றும் கோரி பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், செனட்டர் எஸ். நடராசா ஆகியோர் பிரதமருக்குத் தந்திமூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. இரத்தினவடிவேலுவும் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசாவும் அனுப்பியுள்ள ஒரு தந்தியில், வல்வெட்டித்துறைச் சம்பவங்கள்பற்றி பகிரங்க விசாரணை செய்ய ஒரு கமிஷன் நியமிக்க வேண்டுமெனக் கோரியுள்ளனர்.

இரண்டு தினங்களுக்கு முன் வல்வெட்டித்துறையில் இருவரைப் பொலிசார் தாக்கினராம். இதனைக் கண்டிக்குமுகமாகவே வல்வை சேவா சனசமூக நிலைய முன்றலில் நேற்று முன்தினம் மாலை கூட்டம் நடைபெற்றது.

## 'பிரதமரிடம் நேரில் முறையிடுவோம்'

நேற்று முன்தினம் மாலை வல்வெட்டித்துறையில் இராணுவத்தினரும் பொலிசாரும் பொதுமக்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தி மிருகத்தனமாக நடந்து கொண்டதுடன் துப்பாக்கிப்பிரயோகம் செய்து 28 வயதான சிவஞானசுந்தரம் என்ற இளைஞரின் உயிரைப் பலி வாங்கியது சம்பந்தமாக பிரதம மந்திரியை நேரில் சந்தித்துப் பேசப் போவதாக நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் தெரிவித்தார். வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் பற்றி பிரதமருக்கு நிலைமையை எடுத்துக் கூறி வல்வெட்டித்துறையில் உள்ள இராணுவத்தினர் மீதும் பொலிசார் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரப்போவதாக டாக்டர் நாகநாதன் தெரிவித்தார். அவருடன் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கமும் கொழும்புக்குப் பிரயாணமானார்.

## உதவிப் பொலிஸ் சுப்ரின்டன்ட் சாட்சியம்

வல்வெட்டித்துறைத் துப்பாக்கிப் பிரயோகத்தல் மாண்ட சிவஞானசுந்தரத்தின் [28வயது] மரணம்சம்பந்தமாக நடந்த விசாரணையின்போது காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் சுப்ரின்டன்ட் திரு. லியனகே சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

8-4-67ந் திகதி நான் யாழ்ப்பாணத்திலுள்ள படமாளிகை ஒன்றில் படம் பார்த்தேன். இரவு 8-30 மணியளவில் வல்வெட்டித்துறையில் கலகம் நடப்பதாகத் தகவல் எட்டியது. உடனே நான் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஒரு பொலிஸ் கோஷ்டியுடன் வல்வெட்டித்துறைக்கு 9-30க்குப் போனேன். அங்குள்ள வீதிகளில் பலர் நிற்பதையும் கற்கள், போத்தல்கள் வீசப்பட்டிருப்பதையும் கண்டேன். பொலிஸார் அச்சமடைந்து நின்றார்கள். என்னுடன் வந்த இன்ஸ்பெக்டர் விஜயசூரியாவை பாதுகாப்புக்காக சனசமூகநிலைய வாசலில் நிற்கச்செய்துவிட்டு சனசமூக நிலையத்திற்குள் சென்றேன் அங்கு இன்ஸ்பெக்டர் பத்திரானா, சார்ஜன்ட் இராசரத்தினம், லெப்டினன்ட் விஜயரத்னா ஆகியோர் காயங்களுடன் நிற்பதைக் கண்டேன்.

[6-ம் பக்கம் பார்க்க]

புத்தாண்டை புனிதமுடன் கொண்டாட

உங்களுக்குத் தேவையான எல்லா விதமான ஜவுளி வகைகளையும் பெற்று மகிழ

இன்றே விஜயஞ்செய்யுங்கள்!

ராஜ்கோபால்ஸ்

36/1, பெரியகடை — யாழ்ப்பாண

போன்: 7168

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒற்றுமையான குடும்பத்தில்தான் மகிழ்ச்சி இருக்கும். சண்டையும் பிளவும் ஏற்படின் துக்கம்தான். உலக குடும்பத்தைஒற்றுமைப்படுத்தும் சக்தி கடவுளே. கடவுள் மூலம் தான் உலக அமைதியையும் இன்பத்தையும் ஏற்படுத்த முடியும்.

—சுவாமி ராமதாஸ்


ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஸ்ரீ பங்குனி மீ 27உ. (10-4-67)


## பயங்கர சம்பவங்கள்

வல்வெட்டித்துறையிலிருந்து பயங்கரமான செய்திகள் கிடைக்கின்றன. பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய பொலிசாரும் இராணுவத்தினரும் பொதுமக்களையே துன்புறுத்துவது வேலியே பயிரைமேய்ந்த கதையாக இருக்கிறது. வல்வெட்டித்துறைச் சம்பவங்கள், ஏதோ எங்கோ ஒரு மூலையில் நடைபெற்ற சிறு சம்பவம் என்று கருதி ஒரு கண்துடைப்பு விசாரணையுடன் விட்டுவிடக் கூடியதல்ல. நாட்டின் அமைதியைக்குலைத்து அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தி நாட்டின் ஜனநாயகத்துக்கே குழி தோண்டுவதற்கு ஒரு சிலர் திட்டமிட்டுச் சதிசெய்வதாகவே இச்சம்பவங்கள் தோன்றுகின்றன. 'ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து ஆளையே கடிக்கும் நிலை' ஏற்படுமுன் அரசாங்கம் உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இனியும் இதில் தாமதம் செய்வதும் அசமந்தமாக இருப்பதும் அரசாங்கத்துக்கே தீங்காக முடியலாம். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் வடபகுதி எம். பி.க்கள் வல்வெட்டித்துறை நிலையைப் பிரதமருக்கு உடனடியாக எடுத்துக்கூறி அவசர அவசரமாகக் காரியங்கள் செய்ய வேண்டியது அவசியமாகிவிட்டது.

வல்வெட்டித்துறையில் சென்றசெவ்வாய்க்கிழமை இரவு இராணுவ சிப்பாய்கள் சிலர் தான்தோன்றித்தனமான முறையில் பொதுமக்கள் மீது கெடுபிடித் தாக்குதல் நடத்தியதாக வெளிவந்த புகார்கள் பற்றிய பொலிசாரின் விசாரணை முடிவடையவில்லை. அதற்குள் சில பொலிசாரே அங்கு மிருகத்தனமான முறையில் நடந்து அருமருந்தன்ன ஓர்உயிரையும் பலி கொண்டிருக்கிறார்கள். இராணுவத் தாக்குதல் நடைபெற்ற இரண்டு தினங்களில் இரண்டுபேர் பொலிஸாரால் தாக்கப்பட்டனராம். இச்சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் பொருட்டு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொதுமக்கள் சிலர் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை கூடினராம். பருத்தித்துறைத் தொகுதி எம். பி., பட்டினசபைத் தலைவர் ஆகியாரும் கலந்துகொண்ட இக்கூட்டத்துக்கு ஒரு சமாதான நீதவான் தலைமை வகித்திருக்கிறார். இக்கூட்டத்தில் தான் பொலிஸார் புகுந்து தாக்கியிருக்கிறார்களாம். இவர்களுக்கு உதவியாக இராணுவத்தினரும் சேர்ந்து தாக்குதல் நடத்தியிருக்கிறார்களாம். கூட்டத்தினர் தங்கள்மீது கல்லெறிந்து தாக்கியதாகவும், வீதிவழியே சென்ற ஆயுதம் தரிக்காத இராணுவ ஜீப்மீது கல் வீசியதாகவும் பொலிஸாரும் இராணுவத்தினரும் தெரிவித்துள்ளனர்.

கூட்டம் அமைதியாக நடைபெற்றிருக்கிறது. பொலிஸாரோ இராணுவத்தினரோ அங்கு அழைக்கப்படவில்லை. அனுமதிபெறாமல் கூட்டம் நடைபெற்றிருந்தாலும்கூட, பொலிஸ் அதிகாரி அங்கு சென்று கூட்டத்தைக் கலைக்குமாறு அதற்குத் தலைமைவகித்த சமாதான நீதவானையோ அங்கு சமுகமளித்திருந்த அப்பகுதி எம்.பி.யையோ கேட்டிருக்கலாம். ''கூட்டத்தினர் கல்லெறிந்தார்கள், அதனால்தான் தற்பாதுகாப்புக்காகவும், அமைதியை நிலைநாட்டவும் தடியடிப்பிரயோகம் செய்தோம். நிலைமை கட்டுக்கடங்காது போகவே துப்பாக்கிப்பிரயோகம்செய்தோம்'' என்று பொலிஸார் கூறுவது வழமையான தந்திரோபாயமாகிவிட்டது.

பொலிஸார் ஏன் அங்கு சென்றனர்? எதற்காகச் சென்றனர்? இராணுவத்தினருக்கு அங்கு என்ன வேலை? கள்ளக் கடத்தலையும், சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதற்கு கடற்கரையோரத்தில் காவல்புரிய அனுப்பப்பட்ட இராணுவத்தினருக்கு சனசமூக நிலையத்தில் என்ன வேலை?

பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. தங்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸாரிடமும் இராணுவத்தினரிடமுமிருந்தேபொது மக்கள் தங்களைப் பாதுகாக்கவேண்டிய அவல நிலையை அடைந்துள்ளனர். தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பப்படும் பொலிஸும், இராணுவமும் எதுவும் எப்படியும் நடந்துகொள்ளலாம் என்ற மனப்பான்மை, சில அதிகாரிகளின் மனதில் 1956ம் ஆண்டுக்குப் பின்னர் வளர்ந்து வந்துள்ளது. தேசீய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின் அந்த மனப்பான்மைமாறவில்லை. 1956-ம் ஆண்டின் பின்னர் பொலிசாரினதும் இராணுவத்தினரதும் நடவடிக்கைகள் குறித்தும், கள்ளக்கடத்தலையும், 'சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதில் அவர்கள் நிகழ்த்திய 'சாதனை'கள் குறித்தும் ஒரு கமிஷனை நியமித்து விசாரணைசெய்வது உபயோகமாக இருக்கும். இதே சமயம் வல்வெட்டித்துறையில் சென்ற சில தினங்களாக நடந்துவரும் சம்பவங்கள் குறித்தும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும் நீதிக்கமிஷன் விசாரணை நடைபெறவேண்டியது அவசியமும் அவசரமுமாகும். இதற்கிடையில் இப்பகுதி மக்களின் பாதுகாப்பையும் நாட்டின் அமைதியையும்கருத்தில்கொண்டு வல்வெட்டித்துறையில் உள்ள இராணுவத்தினரையும், பொலிசாரையும் உடனடியாக இடமாற்றம் செய்வது நல்லது.

## இந்திய பத்திரிகைகள் இறக்குமதி

சஞ்சிகைகள், பத்திரிகைகள் இறக்குமதியாளர் சங்கக் காரியதரிசி எழுதுவதாவது-

இந்தியப் பத்திரிகை நிர்வாகிகள் சிலர் சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்ததைப் பற்றி 'ஐயாறன்' சென்ற மாதம் 22ந் திகதிப் பத்திரிகையில் எழுதியிருந்தார். அந்நிர்வாகிகள் கூறியவை ஒருதலைப்பட்சமானவை. சென்ற இரண்டு மாத காலத்துக்குள் பல இந்தியப் பத்திரிகை அதிபர்கள் இங்கு இருதடவை படையெடுத்து வந்து இலங்கை ஏஜண்டுகளை, செலாவணிச் சட்டத்தை மீறி அதிகமான பணம் கொடுக்கும்படி வற்புறுத்தினர். நியாயமாக அவர்களுக்குச் சேர வேண்டியதைவிட 100க்கு 57 1/2 வீதம் அதிகம்பெற விரும்புகின்றனர். இந்த யோசனை நேர்மையாகாததுடன் சட்டவிரோதமுமாகும். செலாவணிச் சிக்கலில் தவிக்கும் இலங்கைக்குத் தீங்குமாகும். இதற்கு மாறாக எங்கள் சங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

---

## வயோதிபர் விடுதி சிரமதானம்

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை சர்வதேச சிவில் சேவை இயக்கத்தினர் நேற்றும் முன்தினமும் கைதடி வயோதிபர் விடுதியில் சிரமதானத்தில் ஈடுபட்டனர். மேற்படி விடுதி வார்டுகளை துப்புரவு செய்ததோடு ஆஸ்பத்திரி முகப்புக்காணியைத் துப்புரவுசெய்து அங்கு மிளகாய் கன்றுகளையும்நாட்டினார்கள். இச்சிரமதானத்தில்பலகிராமசேவையாளர்களும் கலந்துகொண்டனர். [ந. நி.]

---

## உருளைக்கிழங்கு அறுவடை

சங்கானை, ஞாயிறு

நேற்றுமுன்தினம் சங்கானையில் உள்ள கிருஷிகப் பகுதியினரால் வலி-மேற்குப் பகுதியில் விளைவிக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட உருளைக்கிழங்குகளை சங்கானை கிழக்கு தொட்டிலடி கூட்டுறவு ஸ்தாபனத்தில் வைத்துக்கொள்முதல் செய்யப்பட்டது. சென்றவருடத்திலும் பார்க்க இம்முறை அதிக கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைக் கிழங்குகளின் காரணமாகத் தான் விளைச்சல் கூடியுள்ளதென விவசாயிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

---

## பஸ் சீர்கேடு

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம், தொல்புரம், பண்ணாகம் ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் கடந்த இரண்டு தினங்களாக இ. போ. ச.வின் யாழ்.மேற்கு டிப்போவினரால் சேவை செய்யப்படும் 782,783 இலக்கமுடைய பஸ் வண்டிகள் குறிப்பிட்ட நேரத்தில் செயற்படாததால் மிகவும் கஷ்டம் அடைந்துள்ளனர். குறிப்பாக காலைச் சேவை மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது. மூளாய் வட்டுக்கோட்டை, சித்தங்கேணி ஆகிய பாதைகளில் வேறு பாதை பஸ் வண்டிகள் செல்வதால் அப்பகுதி மக்கள் ஓரளவு நன்மையடையும் வாய்ப்பு ஏற்பட்டாலும் சுழிபுரம், [illegible] மத்தியிலே [illegible] பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறைச் சம்பவம்

# இளைஞன் மாண்ட இடத்தில் நெஞ்சுருக்கும் காட்சி

## பொதுமக்கள், எம். பி, க்கள் தேம்பி அழுதார்கள்

யாழ்ப்பணம், திங்.

நேற்று முன்தினம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து நேற்று நண்பகல் 1-30 மணியளவில் அங்கு மீண்டுமொரு குழப்ப நிலைஏற்பட்டது. தமது இளைஞன் ஒருவனைத் துப்பாக்கிச் சூட்டுக்கு பலிகொடுத்த வல்வெட்டித்துறை வாசிகள் சம்பவம் நடந்த நேரத்திலிருந்து கொந்தளித்த நிலையிலிருக்கிறார்கள். சம்பவம் நடந்த இடமான வல்வெட்டித்துறைச் சந்தியில் சுமார் 100-க்கும்மேற்பட்ட பொலிஸார் துப்பாக்கிகள் சகிதம் அங்கு காவல்புரிந்துகொண்டிருந்தார்கள்.

சம்பவம் நடந்த இடமான வல்வெட்டித்துறைச் சந்திக்கு அருகாமையிலேயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான ஆர். சிவஞானசுந்தரத்தின் மரண விசாரணையும், பிரேதபரிசோதனையும் நடைபெற்றது, இதனைப்பார்க்கப் பொதுமக்கள்எவருமே அனுமதிக்கப்படாதபோதும் அவர்கள் அங்கு நின்று கொண்டிருந்தார்கள்.

### கண்ணீர் சொரிந்த காட்சி

நேற்று நண்பகல் 1-30 மணியளவில் பொதுமக்கள் அனைவரும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து மரணமான இளைஞனை கடைசித்தடவையாகப் பார்ப்பதற்காக கண்களிலிருந்தும் கண்ணீர் தாரை தாரையாக வடிய சம்பவம் நடந்த இடத்துக்குச்சென்றபோது அங்கு காவல்புரிந்து கொண்டிருந்த பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். பொலிஸாரின் தடை உத்தரவை மீறி மரணமான இளைஞனைப் பார்ப்பதற்காக பொதுமக்கள் மைதானத்தில் பிரவேசித்தபோது பொலிஸார் துப்பாக்கிகளை மேலே உயர்த்தினார்கள். கைத்துப்பாக்கியைக் கையிலேந்தியவண்ணம் முன்னணியில் நின்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் முன் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் சென்று, பொதுமக்களை அநீதியான முறையில் நடாத்தவேண்டாமென்றும் அவர்களை மனிதத்தன்மையுடன் நடாத்தும்படியும் கேட்டபோது அந்த இன்ஸ்பெக்டர் திரு. சிவசிதம்பரத்திடம் ''இன்னும் ஒன்று வேண்டுமா?' என்றுகேட்டாராம். அதனைத் தொடர்ந்து திரு. சிவசிதம்பரமும், பருத்தித்துறை எம். பி. திரு. கே, துரைரத்தினமும், பருத்தித்துறை பட்டின சபைத் தலைவர் திரு. நடராஜாவும் அங்கிருந்த பொதுமக்களைப் பார்த்து 'பிரதமரின் உத்தரவைத்தொடர்ந்து பொலிஸாரின் பூரண விசாரணை முடிவடையும்வரை எந்தக் குழப்ப நிலையும் ஏற்படாதவண்ணம் அமைதியாகஇருக்கும்படியும் தயவாகக் கேட்டுக்கொண்டனர். இதன்பின் பொதுமக்கள் அனைவரும் அமைதியாக திரும்பிச்சென்றார்கள்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற இடமான வல்வை சனசமூகநிலையச்சந்தி பெரும் போர்ஒன்று நடந்து முடிந்த போர்க்களத்தைப் போல் காட்சியளித்தது. வீதிகளெங்கும் உடைத்த போத்தல்களும், கற்களும், சிதறிய ஓடுகளும், பொலிசாரின் தாக்குதலுக்குள்ளானவை என்று சொல்லப்படும் பல சைக்கிள்களும் நொருங்கியநிலையில் வீதிகளெங்கும் பரவிக் கிடந்தன.

### எம. பிக்கள் அழுதார்கள்

பொதுமக்கள் அனைவருமே ஊண் உறக்கமற்றவர்களாக வீதிகளிலேயே கவலைதோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். திருவாளர்கள் எம். சிவசிதம்பரமும், கே. துரைரத்தினமும், நேற்று முழுவதும் துப்பாக்கிச்சூடுநடைபெற்ற இடத்திலேயே நின்றவண்ணம் அங்கு நின்ற பொதுமக்களுக்கும் மரணமானவரின் உறவினர்களுக்கும் ஆறுதல் கூறியவண்ணம் நின்றார்கள். துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இளைஞனின் உடலை ''சவப்பெட்டிக்குள்'' திரு. எம். சிவசிதம்பரமும், திரு. கே. துரைரத்தினமும் தூக்கி வைத்துவிட்டு தங்கள் முகத்தை கைகளால் பொத்தியவண்ணம் குலுங்கிக் குலுங்கி அழுதார்கள்.

வல்வெட்டித்துறையில் நேற்றுக் கடைகள் எதுவுமே திறக்கப்படவில்லை. இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்கான பல கடைகள் உடைத்து நொருக்கப்பட்டு சிதறியவண்ணம் இருக்கின்றன. வீடுகளிலும், சந்திகளிலும், கடைகளிலும், கார்களிலும், சைக்கிள்களிலும் மற்றெல்லா வாகனங்களிலும் நேற்று முழுவதும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. மரணமான இளைஞனுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நேற்று வல்வெட்டித்துறை மீனவர்கள் எவரும் மீன் பிடிக்கச்செல்லவில்லை. இதனால் வல்வெட்டித்துறை சந்தையே கூடவில்லை. வல்வெட்டித்துறையில் எப்போதும் எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படலாம் எனப் பொதுமக்கள் பீதியுடன் காணப்படுகின்றார்கள்.

### இறுதிச்சடங்கு

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான இளைஞனின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை அவரது இல்லத்தில் இருந்துஊறணிமயானத்தை நோக்கி ஆரம்பமாகியது. திருவாளர்கள் எம். சிவசிதம்பரம் எம். பி., கே. துரைரத்தினம் எம். பி., செனட்டர் சு. நடராஜா, வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவர் திரு. இரத்தினவடிவேலு, பருத்தித்துறை நகரசபைத்தலைவர் திரு. நடராஜா ஆகியோர் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு தமது அஞ்சலியை செலுத்தினார்கள். (ந. நி)

---

## விவசாயப்படைக்கு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், திங்கள்

இலங்கை விவசாயப்படைக்கு யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவிலிருந்து மாத்திரம் 633 விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசிலனைசெய்து சிபார்சு செய்வதற்காக யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. எச். புள்ளேநாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வாலிபர்களை விவசாயப்படைக்குச் சேர்ப்பதற்காக நேர்முகப்பரீட்சைகள் இம்மாத மத்தியில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [ந. நி.]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாநிலங்களுக்கு அதிக அதிகாரமளிக்கும் அரசியல் சாசன திருத்தம்

## பரிசீலனைசெய்ய உயர் அதிகார கமிட்டி

### புதுடில்லியில் அண்ணா வலியுறுத்தல்

புதுடில்லி, ஏப்ரல் 9

இந்திய அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க ஓர் உயர் அதிகாரக் கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென தமிழ்நாட்டு முதல் மந்திரி திரு. சி. என். அண்ணாதுரை இங்கு தெரிவித்தார்.

புதுடில்லியில் முதல் மந்திரிகள் மகாநாட்டில் பங்கு பற்ற வந்துள்ள திரு. அண்ணாதுரை பாரத பிரெஸ் கிளப் நிருபர்களிடம் பேசுகையில் மேற்கண்ட யோசனையைக் கூறினார்.

**திருத்தம் அவசியம்**

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் அளிக்கும் வகையில் அரசியல் சாசனம் மாற்றியமைக்கப்பட்டால், மத்திய அரசாங்கத்துக்கு மாநில ராஜ்யங்களின் ஒத்துழைப்பு அதிகமாகக்கிடைக்குமெனவும் முதல் மந்திரி மேலும் தெரிவித்தார்.

சுதந்திரம் கிடைத்து 17 ஆண்டுகளுக்கு மேலாகியும், அரசியல் சாசனம் இன்னும் திருத்தியமைக்கப்படாதிருப்பது விரும்பத்தக்கதல்லவெனவும் அவர் கூறினார். திருத்தியமைக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார் அவர்.

**இந்தி மொழி**

இந்தி மொழி பற்றிய தமது நிலை குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தி ஒரு தேசிய மொழியாக இருப்பதைப் பற்றித் தமக்கு ஆட்சேபமில்லையெனவும், அதை இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாக்குவதைத் தாம் எதிர்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**மதுவிலக்கு**

மதுவிலக்குப் பற்றிக்குறிப்பிடுகையில், மதுவிலக்கைத் தாம் ஆதரிப்பதாகவும், ஆனால், அது எவ்வளவு தூரம் வெற்றிகரமாக அமுல் நடத்தப்பட்டிருக்கிறது என்பதே கேள்வி என்றும் அவர் கூறினார்.

## ஆசிய பிராந்திய பொருளாதாரம்

டோக்கியோ, ஏப்ரல் 9

இங்குகூடியிருக்கும் ஐ.நா.வின் ஆசிய கீழ்க்கோடி பொருளாதாரக் கமிஷனின் கூட்டத்தில், பிராந்தியங்களுக்கிடையே அதிக ஒத்துழைப்பும் அவசியமெனப் பாரதப்பிரதிநிதி திரு. டி.பி. தத் வலியுறுத்தினர். நாடுகளின் சிறிய சிறிய கோஷ்டிகளைத்தாம் வரவேற்கவில்லையெனவும், பிராந்தியங்கள் யாவும் ஒரே அமைப்பின்கீழ் இயங்குவதையே தாம் ஆதரிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். ரஷ்யாவின் ஆதரவைப்பெற்றுள்ள இவரது கருத்தை அமெரிக்கா எதிர்த்துள்ளது.

## புதுச்சேரிமந்திரி சபை பதவியேற்றது

புதுச்சேரி, ஏப்ரல் 9

புதுச்சேரி காங்கிரஸ் மந்திரிசபை இன்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டது. இம்மந்திரிசபையில் மொத்தம் ஐந்து அங்கத்தவர் உள்ளனர். முதல்மந்திரி திரு. பாரூக்மரைக்கார் ஆவர்.

## முதல் மந்திரிகள் மகாநாட்டில்உணவுப்பிரச்னை

புதுடில்லி, ஏப்ரல் 9

நேற்று இங்கு ஆரம்பமாகிய முதல் மந்திரிகள் மாநாட்டில் உணவுப்பிரச்னையே முதலிடம் வகித்தது. உணவு பற்றிய இறுதித் தீர்மானம் இன்றைய கூட்ட முடிவில் எடுக்கப்படலாமெனத் தெரிகிறது.

விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கொள்வனவு விலைகள் லாபகரமாக அமையவேண்டுமெனவும், அவ்விதம் அமைந்தால் தான் விவசாயிகள் உணவு உற்பத்தியில் அதிக உற்சாகம் காட்டுவார்களெனவும் முதல் மந்திரிகள் கருத்துத் தெரிவித்தனர். கொள்வனவு விலைகள் நாடெங்கணும் ஒரே சீராக அமைவதையும் சில முதல் மந்திரிகள் வரவேற்றுள்ளனர்.

தற்போதைய ஒற்றை ராஜ்ய உணவு மண்டல முறையே தொடர்ந்திருக்க வேண்டுமென, பீஹாரையும், குஜராத்தையும் தவிர மற்றைய முதல் மந்திரிகள் அனைவரும் விருப்பம் தெரிவித்தனர்.

மத்திய, உணவுக் கார்ப்பரேஷனினால் அதிக செலவென்றும், அதன் வேலைகள் திட்டங்கள் ஆகியன நாட்டில் உள்ள உணவு நிலையைச் சரியாகக் கணிக்கவில்லையெனவும், பல முதல் மந்திரிகள் உணவுக் கார்ப்பரேஷன்மீது அதிருப்தி தெரிவித்தனர்.

## பாரத-ரஷ்யத் தொடர்புகள்

### ராஷ்டிரபதி வாழ்த்து

புதுடில்லி, ஏப்ரல் 9

பாரதத்துக்கும் சோவியத் ரஷ்யாவுக்குமிடையே கடந்த 20 ஆண்டுகளாக இருந்துவரும் பொருளாதார, கலாச்சார உறவுகள் பற்றிப் பாரத ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

பாரதத்துக்கும் ரஷ்யாவுக்குமிடையே ராஜ்ய உறவுத் தொடர்புகள் ஸ்தாபிக்கப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவாகிவிட்டதையொட்டி சோவியத் பத்திரிகை 'டாஸ்'க்கு அளித்த பேட்டியிலேயே ராஷ்டிரபதி இரு நாடுகளினதும் சினேகபூர்வமான தொடர்புகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்த 20வது ஆண்டு நிறைவுவிழா, அடுத்த வியாழன் கொண்டாடப்படும்.

பாரத-ரஷ்யத் தொடர்புகள் சுமுகமான முறையில் அமைத்து வந்துள்ளதாகவும், மேலும் அவை வளர்ந்துவருமெனத் தாம் நம்புவதாகவும் ராஷ்டிரபதி கூறியுள்ளார்.

லண்டன், ஏப்ரல் 9

சீன முப்படை நீண்டகாலப்போருக்கு நின்றுபிடிக்கும் பலம் வாய்ந்ததல்லவென பிரிட்டிஷ்படை ஆராய்ச்சிக்கழகம் தெரிவித்துள்ளது

## பஞ்சாப் மாநிலத்தில் ஸ்திரமற்ற அரசியல்நிலை

### மீண்டும் தேர்தல் நடாத்த தயார் என்கிறார் முதல்வர்

சண்டிகார், ஏப். 9

பஞ்சாப் மந்திரி சபையின் கவர்னர் உரை மீதான காங்கிரஸ் எதிர்க் கட்சியின் திருத்தம் சட்ட சபையில் நிறைவேறியதைத் தொடர்ந்து, பஞ்சாப் மாநிலத்தில் உறுதியற்ற அரசியல் நிலைமை ஏற்பட்டுள்ளது வாசகர்களுக்குத் தெரிந்ததே.

காங்கிரஸ் எதிர்க்கட்சி, பஞ்சாப்பில் மந்திரிசபை அமைக்குமளவுக்குத் தமக்குப் பலமிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது. இது பற்றி எதிர்க்கட்சியினர் சிலர் புது டில்லிக்குச் சென்று பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் தமது அபிப்பிராயத்தை எடுத்துக் கூறியுள்ளனர்.

**முதல் மந்திரி கருத்து**

கவர்னர் உரை மீதான வாக்கெடுப்பில் தோல்வியடைந்த மந்திரிசபையின் முதல்வரான திரு. குர்னாம் சிங், ஆட்சியிலிருக்கும் ஐக்கிய முன்னணிக் கட்சியிலிருந்து யாரும் ராஜினமாச் செய்யவில்லையென்றும், வேண்டுமானால் எவ்வளவு விரைவோ அவ்வளவு விரைவில் சட்ட சபையை மீண்டும் கூட்டி, நம்பிக்கை வாக்கெடுப்பு நடாத்தத் தாம் தயாராகவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தேவையெனில், சட்ட சபையைக் கலைத்து விட்டு, மக்களின் தீர்ப்பைப் பெற மீண்டும் தேர்தல் நடாத்த கூடத் தாம் ஆயத்தமாகவிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

**ராஷ்டிரபதி ஆட்சி**

எந்தக் கட்சிக்கும் அரசாங்கம் அமைக்கக் கூடிய ஸ்திரமான நிலை இல்லாத நிலையில், பஞ்சாப் மாநிலத்தில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## புத்தஜயந்தி தினத்தில் ஒருநாள் போர்நிறுத்தம்

சைகோன். ஏப். 9

வியட்னும்போரில், 24 மணித்தியாலப்போர் நிறுத்தம்ஏற்படுத்தும்தென்வியட்னுமின் ஆலோசனையை அமெரிக்கர் ஏற்றுள்ளது.

அடுத்த மாதம் 23ம்திகதி புத்த ஜெயந்தி தினமாகும். இதையொட்டியே; இந்தஒருநாள் போர்நிறுத்தத்தை தென்வியட்னும் சிபார்சு செய்துள்ளது. தென்வியட்னுமின் ஆலோசனைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்திருப்பதுடன், குறிப்பிட்ட போர் நிறுத்தக் காலத்தில் வடவியட்னும் மீது குண்டு வீச்சை நிறுத்தவும் தனது சம்மதத்தைத் தெரிவித்துள்ளது.

இப் போர் நிறுத்தத்தை வேண்டுமானுல் விஸ்தரிப்பது பற்றியும் வடவியட்னுமுடன் ஆராயத்தயாராக இருப்பதாக தென்வியட்னும் தெரிவித்துள்ளது. ஆனால், இதுவரை இந்த யோசனைக்கு வடவியட்னுமிடமிருந்துஎதுவித பதிலும் வரவில்லை.

## விண்வெளியில் ரஷ்ய மனிதர்

### மீண்டும்முயற்சி

மாஸ்கோ, ஏப்ரல் 9

கடந்த இரண்டு வருடங்களாக மனிதர்களைக் கொண்டுள்ள விண்வெளிக் கப்பல்களை வானவெளிக்கு மீண்டும் அனுப்பும் முயற்சியில் சோவியத் ரஷ்யா இறங்குமென உலகின் முதலாவது விண்வெளிவீரரான யூரிககாரின் தெரிவித்துள்ளார். ஆனால், இதுஎப்போது இடம்பெறுமென்பது பற்றி அவர் குறிப்பிடவில்லை.




தலைவலி, தடிமல், டெங்குச் சுரம், காய்ச்சல், பல்வலி, இவற்றிலிருந்து துரிதமான, பாதுகாப்பான, வன்மையான நிவாரணம் தந்து, தசைநார் வலிகள் நோவுகளைத் தணிப்பது டிஸ்பிரின்.

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், நிச்சயமாகவே வன்மையான பாதுகாப்பான நிவாரணம் தந்திருக்கின்றன. அதனால் தான் உலகெங்குமுள்ள டாக்டர்கள் டிஸ்பிரினை நம்பிக்கையுடன் சிபாரிசு செய்கிறார்கள்.

டிஸ்பிரின், முற்றாகக் கரைவதும் இரத்தோட்டத்தில் உடனே செறிவதுமாகையால், அதி துரித நிவாரணம் தருகிறது.



டிஸ்பிரின் பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

... தயாரிப்பு.

RC 165

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புது வருடப் பிறப்புக்கு

உங்களுக்குத்தேவையான

## எலிபன்ட் பிரான்ட்

குளிர்பானதிகளை

## இப்பொழுதே

வாங்குங்கள்!




ஒரேஞ் பார்லி

லங்கா லைம்

ஜிஞ்ஜர் பியர்

கிறீம் சோடா

நெக்டோ

சோடா

லங்கா ஒரேஞ், பிற்றர் லெமன்,
ட்ரை ஜிஞ்ஜர் ஏல், லெமனேட்,
லைம் ஜுயிஸ், சோடா, டொனிக்.

தரம்மிக்க இப்பொருள்களைத்
தயாரிப்போர்

**எலிபன்ட் ஹவுஸ்**

சிலோன்கோல்ட் ஸ்டோர்ஸ்
லிமிட்டெட்,
கொழும்பு – கண்டி –
திருக்கோணமலை.


## இப்படியும் அதிர்ஷ்டம் அடிக்கும்

கொழும்பு, ஞாயிறு

தேசிய லொத்தர் சபை சுவீப் டிக்கட்டுகளை வாங்கி சீட்டிழுப்பின்போது பரிசுகளைப்பெறமுடியாது போனவர்களுக்கும் பரிசுகளை வழங்க லொத்தர் சபை தீர்மானித்துள்ளது.

இந்தப்புதிய போட்டியின் படி பரிசுபெறாத ஒருவர் தாம் எடுத்த டிக்கெட்டின் மறுபக்கத்தில் அடுத்த சீட்டிழுப்பின்போது முதல்பரிசு பெறக்கூடியதென்று ஊகிக்கக்கூடிய டிக்கட் நம்பரில் எழுத்துக்கு முன்உள்ள எண்களைக் குறித்து தமது பெயர் விலாசம் ஆகிய வற்றையும் எழுதி அடுத்த சீட்டிழுப்பு நடைபெறும் தினத்துக்கு முன்னர் தேசிய லொத்தர் சபைக்கு அனுப்பவேண்டும்.

சரியான எண்ணை எழுதி அனுப்பியவருக்கு 1,250 ரூபா பரிசாக அளிக்கப்படவிருக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான எண்களைக் குறிப்பிட்டு அனுப்பப்படும் டிக்கட்டுகளுக்கு இப்பணம் பகிர்ந்தளிக்கப்படும். இவ்விதம் சரியாக அனுப்பும் 50 டிக்கட்டுகளுக்கே பரிசுகள் வழங்கப்படும். ஒருவருக்கு ஒரு பரிசு மட்டுமே வழங்கப்படும்.

இவ்வித போட்டி மூன்று வாரத்துக்கொருமுறைநடத்தப்படும். முதல் போட்டி 137-ம், 138-ம் இலக்க தேசிய சுவீப் சீட்டிழுப்பிலிருந்து ஆரம்பித்து வைக்கப்படும். இதில் வெற்றி பெறுபவர் விபரம் இம்மாதம் 28-ம் திகதி தெரிவிக்கப்படும்.

## ஐயரைத்தாக்கிய மூவருக்கு சிறை

சாவகச்சேரி, ஞாயிறு

குதுன்னலையைச் சேர்ந்தவரும் கொடிகாமம் மருதடிப் பிள்ளையார் கோவில் அர்ச்சகருமான வை-சுப்பிரமணிய ஐயரைத்தாக்கி காயப்படுத்தி அவரை அவமதித்ததாககொடிகாமம் வாசிகளான ஏ.செல்லையா, பி. செல்லையா என். செல்லையா ஆகிய மூவர் மீதும் குற்றம்சாட்டிச்சாவகச்சேரிப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தின் மாஜிஸ்திரேட் திரு. கே.விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. விசாரணை முடிவில் எதிரிகள் மூவரையும் குற்றவாளிகளாகக் கண்ட மாஜிஸ்திரேட் மூவருக்கும் தலா ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

## பெண்ணைத் தாக்கினராம்

### ரூபா.50 அபராதம்

சாவகச்சேரி, ஞாயிறு

கடந்த வருடம் ஆகஸ்ட் 29-ம் திகதி பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த இத்தாவில் என்னுமிடத்தில் ஜே. ஜெயமலர் என்னும் இளம் பெண்ணை ரீ.கந்தசாமி என்பவர் தாக்கியதாகப் பளைப் பொலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டவழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு.கே விக்னராஜா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 50ரூபா அபராதம் அல்லது 4வாரச் சிறைத் தண்டனை அனுபவிக்கும்படி தீர்ப்பு வழங்கினர்.

## நம்பிக்கை மோசடிக்கு 4 மாத சிறை

சாவகச்சேரி, ஞாயிறு

திருப்பித்தருவதாகக் கூறி சைக்கிள் ஒன்றை வாங்கிச் சென்றவர் திருப்பிக்கொடுக்கத்தவறியதால் அந்நபரையும் சைக்கிளையும் பொலிஸார் கைதுசெய்து சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன் ஆஜர் செய்தபோது அந்நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் 4 மாதச் சிறைத்தண்டனையும் 2 வருடப் பொலிஸ் பாதுகாப்பும் விதிக்கப்பட்டது.

எம். அழகரத்தினம் என்பவருடைய சைக்கிளை எஸ். கந்தசாமி என்பவர் வாங்கிச் சென்று பல நாட்களாகத் திருப்பிக் கொடுக்காதிருந்தார் என இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இந்நபர்முன்பும்இருதடவை குற்றப் பட்டுள்ளாரென்பதைத் தாமே ஒப்புக்கொண்டார்.

## முதலாவது காணிக்கச்சேரி

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியின் புதிய காணி அலுவலகத்தில் முதலாவது காணிக்கச்சேரியொன்று விரைவில் நடைபெறவிருக்கிறது. இக்காணிகச்சேரி கரைச்சிப்பிரிவிலுள்ள புளியம்பொக்கணை, இரணைமடு, தர்மபுரம், ஜெயந்திநகர் ஆகிய இடங்களை பொதுமக்களுக்குவழங்குவதற்காகவே நடைபெறுமெனத் தெரியவருகிறது. இக்காணிகள் பெறுவதற்கு இம்மாதம் 25-ந்திகதி விண்ணப்பிக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி காணி அலுவலகப்பொறுப்பாளர் திரு. எ. ஜெகநாதன் காணிக்கச்சேரி சம்பந்தமான நடவடிக்கைகளை கவனித்து வருகிறர்.


## THE JAFFNA ACADEMY & School of Technology

**CHUNDIKULI, JAFFNA.**

Next term reopens on 3-5-67.

A Revision Class for the University Entrance and G. C. E. Advanced Level will commence on 3-5-67.

Our results at the last G. C. E. (A/L) Dec. 1967. Examination are:

37 called for 4 practicals.
15 " 3 "
4 " " 2 " (Engineering)

We also provide courses for G. C. E (O/L) and (A/L) City and Guild's Electrical Engineering Practice. Survey Draughtsmanship, Civil Draughtsmanship and Building Construction Examinations

Apply in forms available at the Academy Office.

Office will be open between 9.00 a. m. and 1.00 p.m. on all days except Sundays and Poya days during the holidays.

Prospectus avilable at the Office at 50. cts., each.

Hostel accommadations available for a limited number.

Director.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விவசாயப்படைக்கு

## ப. ச. உறுப்பினர் மனு

சங்கானை, ஞாயிறு

வலி - மேற்குக் காரியாதிகாரியின் கந்தோரில் விவசாயப் படைக்கு நேர்முகப் பரீட்சை நடைபெற்ற போது திரளான படித்த வாலிபர்கள் சமுகமளித்திருந்தனர். வாலிபர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய காரியாதிகாரி என். மாணிக்க நடராசா. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கும் இவ்வேளையில் இப்படையில் சேருவதற்கு முன் வந்திருக்கும் உங்களைப் பாராட்டுகின்றேன். உங்கள் சேவை நம் நாட்டைப் பாதுகாக்க உதவட்டும் என்று கூறினர்.

இப்படையில் சேருவதற்கு உயர்தரக் கல்வி கற்ற மாணவர்களும் சங்கானைப் பட்டின சபையின் அங்கத்தவர் ஒருவரும் மனுச்செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## குமாஸ்தாக்கள் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்க சேவைக்குமாஸ்தாக்கள் சேவைச்சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. கூட்டத்தில் தெரியப்பட்ட புது வருட நிர்வாகசபையின் விபரம்: தலைவர் திரு எஸ் இரத்தினசபாபதி [போட்டியின்றித் தெரிவு] உப தலைவர்கள்: திருவாளர்கள் எஸ். செல்வரத்தினம், வி.திருவருள், செயலாளர்: எஸ் கணேசன் [போட்டியின்றித் தெரிவு] உப செயலாளர்: வி.சிவசுப்பிரமணியம். பொருளாளர்: வி.பொன்னம்பலம். [போட்டியின்றித் தெரிவு] உப பொருளாளர்; திரு.இ.கனகசபாபதி, செயற்குழு உறுப்பினர்கள்: ரி.வேலுப்பிள்ளை. எம்.ஆனந்தா, என். சிவக்கொழுந்து, எஸ்.ஜேசுதாஸன், எஸ். அல்பிரட், எஸ் பெரியதம்பி, கே.விவேகானந்தன், இ.விக்கிரமராச்சி, எச் சிறிபாலா, பி. ஜெயதுங்கா. பொதுச்சபை உறுப்பினர்கள்: வி. பொன்னம்பலம் எஸ்.இரத்தினசபாபதி.

[ந.நி.]

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு.

தொல்புரம் பல நோக்குக் கூட்டுறவு சங்க புதிய நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. பொ. நடராசா உபதலைவர் திரு. சி.பரமநாதன். காரியதரிசி திரு. க,வேலுப்பிள்ளை. நிர்வாகசபை உறுப்பினர்கள் திருவாளர்கள்மு. நடராசா ச. கந்தையா. மு வெற்றிவேலு, செ.கந்தையா, இ. வயித்திலிங்கம்கணக்குப்பரிசோதகர், திரு. மு. தாமோதரம்பிள்ளை.

## குறடு யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த திரு. எஸ். வி. பொன்னையா என்பவர் சுன்னாகத்தில் கண்டெடுக்கப்பட்ட குறடொன்றினை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்கள் தகுந்த அத்தாட்சிகாட்டி பெற்றுக்கொள்ளலாம்.

7-4-67 முதல்
ஈஸ்வரன்
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ்.எஸ்.ஆர்.-விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி 1727

## பரிசோதனைக் குழு திடீர் விஜயம்

சுழிபுரம், ஞாயிறு

யாழ்ப்பாணகல்விகந்தோரைச்சேர்ந்த திடீர் பரிசோதனைக்குழுவினர் நேற்றுமுன் தினம் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரிக்கு விஜயம் செய்தனர். அத்துடன் இப்பகுதியிலுள்ள பெரிய கல்லூரிகளுக்கும்சென்று பல புள்ளிவிபரங்களை சேகரித்தனர். குறிப்பாக விஞ்ஞான ஆசிரியர்கள்பற்றிய விபரமும் மேலதிகமாக எவ்வளவு ஆசிரியர்கள் இருக்கின்றனர் என்பதையும் தெரிந்து கொண்டனர்.

## ஹமப்ரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம கம்யூனிஸ்டுகள் கைது

பிரசல்ஸ், ஏப்ரல்9

பெல்ஜியத்துக்கு வந்து சேர்ந்துள்ள அமெரிக்க உப ஜனதிபதி திரு. ஹியூபேர்ட் ஹம்ப்ரிக்கு எதிராக இங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் சம்பநதமாகபெல்ஜியம் கம்யூனிஸ்ட்கட்சியின்காரியதரிசியும், மற்றும் 15அங்கத்தவர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

புத்தாண்டில் புத்தொளியுடன்
மிளிர
கண்கவர் வர்ணங்களில்
ரெர்லின் சேட்டுகளை
அணியுங்கள்
உங்கள் தேவைகளைத் தெரிவு செய்ய
முந்திக்கொள்ளுங்கள்
(வியாபாரிகளுக்கு விசேஷ சலுகை உண்டு)
இன்றே விஜயஞ் செய்யுங்கள்!
கணேசானந்தாஸ்
(மூட்டாசுந் கடைச்சந்தி)
208, கே. கே. எஸ். றோட — யாழ்ப்பாணம்.
1088

மோட்டார் வாகன சொந்தக்காரர்களுக்கு
ஓர் நற்செய்தி!

1967 மே மாதம் முதல்வாரமளவில் கீழ்வரும் அளவுகளிலுள்ள டயர்கள் விநியோகத்துக்குக்கிடைக்கக்கூடியதாக இருக்கின்றது.

520X13 —
590X13 —
520X14 —
560X15 —
குட்இயர் டியூப் இல்லாத டயர்கள் (Good-year — Tubeless)

750X16 — சுப்பர் H. M. 8பிளை டயர் & டியூப்
750X20 — நைலோன் 10 பிளை டயர் & டியூப்
400X19 — ட்ராக்டர் டயர் & டியூப்
450X17 — 4 பிளை டயர் & டியூப்

இப்பொழுதே எம்மிடம் வந்து உங்கள் தேவைகளைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

எமது பதிவேடுகளில் பதிவு செய்வதற்கு தயவு செய்து உங்கள் வாகனங்களின் பதிவுப் புத்தகத்தையும், 1967-ம் ஆண்டிற்குரிய வருமான லைசென்சையும் கொண்டுவரவும்.

T. N. லிங்கம்&சன்
[சிவன்கோவிலடி]
248, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
போன்: 408 1087

இப்பொழுது நீங்கள் விரும்பும் இடத்தில் வெற்றிகரமாக பயிர்செய்யலாம் எஸ்-லொன் குழாய் நீரைக் கொணர்ந்து தரும்.



இன்று விவசாயத்துறையில் உலகமெங்கும் எஸ்-லொன் குழாய் முழுக்க முழுக்க உபயோகிக்கப் பட்டு வருகிறது

ஏற்ற இறக்க இடங்களுக்கு நீர்ப்பாய்ச்சுதல். சிதறித் தெளிக்கும் சேவைகள், உரப்பதார்த்தங்களை குழாய் மூலம் அனுப்புதல், கிருமி நாசினிகள் தெளித்தல். இன்னும் பல கனக்குறைவான. சுலபமாகப் பொருந்தும் குழாய்ப் பிரயோகங்களுக்கு எஸ்-லொன் மிகப் பொருத்தமானதாக விளங்குகின்றது அதன் பலமும். நீடியகால பாவிப்பும். கால வேறுபாட்டால் மாறுபடாத் தன்மையும் சேர்ந்து அதை விவசாயிகளின் முதல் தெரிவாக்குகின்றது

திறமையான இலவச தொழில்நுட்ப சேவைககு கலந்தாலோசிக்கவும்.

எஸ்-லொன் பி. வி. ஸி. குழாய்களையே பாவியுங்கள், அவை உத்தரவாதமுடையவை.

மகாராஜா ஒகனேஷேசன் லிமிட்டெட், பாங்ஷால் வீதி, கொழும்பு 11. டெலிபோன்: 3603, 3634.
ராஜேந்திரமல் லிமிடெட்டின் வாரிசுகள்.


தண்ணீர்ச் சேவை,


மின் காவு குழாய்,


மழை நீர்க் குழாய்கள்,
கீழ்த் தரைக் குழாய்கள்

எஸ்-லோன் ... குழாய்களையே பாவியுங்கள், அவை உத்தரவாதமுடையவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரிகை தொழிலில்பயிற்சி

பத்திரிகைத் தொழிலில் ஆர்வமுள்ள, பத்திரிகைத் தொழிலையே தங்கள் வாழ்க்கையாக்கிக் கொள்ளும் நோக்கமுள்ள, தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சியுடைய, பட்டதாரிகளுக்குப் பத்திரிகைத் தொழிலில் பயிற்சியளிக்கப்படும். விரும்புவோர் இல. 1729, C/o'ஈழநாடு',தபாற்பெட்டி எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு மனுச் செய்யவும். 1729

இப்பொழுது
திரையிடப்படுகிறது
மனோஹரா
[யாழ்ப்பாணம்]
6-30, 9-30மணி. போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும் 4 காட்சிகள்
எம்.கே.ராதா-புஷ்பவல்லி
நடித்த
சம்சாரம்
புத்தம் புதிய கொப்பி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜிகணேசன்
நடித்த
திரும்பிப்பார்

REGAL - JAFFNA
Steve McQueen
James Garner
in
THE GREAT ESCAPE
Time: 4-15, 7-00, 9-45 p. m.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி

## தீப்பிடித்து இளம் பெண் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

உடையில் நெருப்புப்பற்றியதால் எரிகாயங்களுக்குள்ளான அளவெட்டியைச் சேர்ந்த முருகையா இராசம்மா [19வயது] என்ற இளம்பெண் நேற்று முன்தினம் மரணமானார். இம் மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

காலஞ்சென்றவர் கடந்த மாதம் 30ந் திகதி எரிகாயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கட் பட்டிருந்தார். சம்பவம் நடந்ததினத்தன்று நண்பகல் 12 மணியளவில் சமையலறையில் வேலை செய்து கொண்டிருக்கையில் அவரது ஆடையின் பின்புறத்தில் நெருப்புப்பற்றியதாகவும், அவர் கத்திய சத்தம்கேட்டு அயலவர்களும் வந்ததாகவும், பின்னர் அவரை ஆஸ்பத்திரியில்அனுமதித்ததாசவும் ஆனால் இம் மாதம் 7ந்திகதி அவர்மரணமடைந்துவிட்டதாகவும் காலஞ்சென்றவரின் மாமியாரான சின்னையா சின்னம்மா சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

காலஞ்சென்றவரின் சகோதரரான தம்பையா செல்லத்துரை சாட்சியமளிக்கையில் காலஞ்சென்ற தனது சகோதரியை அவரது கணவன் வேறு நபர்களைக் கொண்டுநெருப்பினால் எரித்திருக்கலாமென்றும், அவர்கள் இருவரும் கதைப்பது இல்லையென்றும், இதனால் தான் அவரது கணவரான முருகையா மீது சந்தேகமடைவதாகவும் குறிப்பிட்டார்.

பிரேத பரிசோதனை செய்யப்பட்டபின்னர் காலஞ்சென்றவரது கணவனானசின்னையா முருகையாவும் சாட்சியமளித்தபின்னர் எரிகாயங்களால் ஏற்ப்ட்டவிபத்து மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

[ந.நி.]

## பிரதமரிடம் நேரில் பேச.:.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் ஏற்பட்டகைகலப்பில் காயமடைந்த வல்வெட்டித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரானவும், சார்ஜண்ட் இராஜரத்தினமும் சிகிச்சை பெற்றபின்னர் நேற்றுமாலை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினர்

இராணுவ லெப்டினட் விஜயரத்தினவும் காயமடைந்தார். பொலிஸ், இராணுவ தாக்குதலின்போது பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தின் நெற்றியிலும் சிறிதுகாயமேற்பட்டது.

வல்வெட்டித்துறையிலுள்ள இராணுவத்தினரை அவர்களது முகாமுக்குச் செல்லும்படியும் மறு அறிவித்தல்வரை வெளியே வரக்கூடாதென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

## உதவிப்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி

உடனே அவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டுடன். அதேநேரத்தில்சேகுரோராயணபிள்ளை என்பவநம் காயத்துடன் இருப்பதை அறிந்து அவரையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தேன். இதன்பின்னர் சுப்பிரமணியம் இராமநாதன் என்பவரை இருபொலிசார் என்னிடம் அழைத்து வந்தனர்.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் தமது சாட்சியத்தில் பின்வருமாறு கூறினார்:—

நாங்கள் கூட்டத்தை மிக அமைதியாக நடத்திக் கொண்டிருந்தோம். அந்நேரத்தில் பொலிஸ் 'ஜீப்' அவ்வீதியால் போய்க் கொண்டிருந்ததைக் கண்டேன். ஜீப் அங்குமிங்கும் போய்வந்தது. பின்னர் கூட்டம் நடந்த இடத்திற்கு அருகேநின்றது. அதிலிருந்து பொலிசார் இறங்கி வந்து கூட்டத்திலுள்ளவர்களைத் தாக்கினார்கள். நானும் கீழேவிழுந்து எழுந்து, இன்ஸ்பெக்டர் பத்திரானவைப் பார்த்து ''ஏன் இப்படிச் செய்கிறீர்களென்று'' கேட்டேன். ''பொலிசாருக்கும் ஜீப்புக்கும் கல் எறிந்ததாக அவர் சொன்னார். அப்படிப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது இராணுவசிப்பாய்கள் அங்கு வந்தனர் அவ்விடத்திலுள்ளவர்களை தாக்கத் தொடங்கினார்கள் பொலிசாரின் தாக்குதலினால் நிலத்தில் விழுந்திருந்த சேது நாராயணபிள்ளை என்பவருக்கு பொலிஸ் ஒருவர் அவ்விடத்தில் இருந்த சையிக்கிளைத் தூக்கி அவர் மீது போட்டார். அப்பொலிசாரை அடையாளம் காட்ட என்னால் முடியும். பின்னர் கடையொன்றின் முன்பக்க மேசையின் மேலும் ஒருவர் சையிக்கிளை தூக்கி போட்டார். அவரையும் அடையாளம் காட்ட என்னால் முடியும். ஆபாசமாகப் பேசினார்கள். பிறகு இன்ஸ்பெக்டர் பத்திரான தனக்கு காயம் ஏற்பட்டுவிட்டதாகச் சொன்னார். சிறிது நேரத்தின்பின் சார்ஜண்ட் இராசரத்தினமும் காயத்துடன் வந்தார். பின்னர் காங்கேசன்துறை உதவி பொலிஸ்சுப்ரின்டன்ட் அவ்விடம் வந்தார்.

மோட்டார் வான் சாரதி நடராசா சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

இறந்தவருடன் நான் வானில் சென்றேன். வானை பொலிசார் தடுத்தபோது வியாபாரத்தால் வந்ததாகச்சென்னேம். உடனே அடித்தார். நான் இறங்கி ஓடினேன் பின்னர் ''ஐயோ, ஐயோ'' என்று சத்தம் கேட்டது. இதைத்தொடர்ந்து ''சூட்'' என்று ஒரு சத்தம் கேட்டது.

## கலகம் ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம

வல்வெட்டித்துறையில் நேற்று முன்தினம் நடந்த பயங்கர சம்பவங்களுக்கான மூலகாரணம் இருவர்தான் என்று கூறப்படுகிறது.

சென்ற வெள்ளிக்கிழமை மாலை வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரி வாசலில் மதுபோதையில் நின்ற இருவர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றி வந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்ததுடன் அவர்களுடனேயே தகராறும் செய்யத் தொடங்கினார்களாம். நிலைமையைச் சமாளிக்க அஞ்சிய பொலிசார் டெலிபோன் மூலம் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுத்தனராம். தகவல் கிடைத்ததும் பொலிஸ் கோஷ்டி ஒன்று ஆஸ்பத்திரியை நோக்கி வந்ததாகவும் இதற்குள் அந்த இருவரும் அங்கிருந்து மறைந்துவிட்டதாகவும் ஆனால் ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளியைப் பார்க்க வந்திருந்த வேறு இரு இளைஞர்களை பொலிசார் கூட்டிச் சென்று தாக்கியதாகவும் கூறப்படுகிறது. கைது செய்த இரு இளைஞர்களையும் விடுதலை செய்யுமாறு பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற அவர்களின் தாயாரையும் பொலிஸ் நிலையத்தில் பொலிசார் தாக்கினார்களாம். இச்சம்பவங்களைக் சண்டிப்பதற்காகவேதான் வல்வை சமூக சேவா சனசமூகநிலையத்தில் நேற்று முன்தினம் மாலை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தான் பொலிசார் புகுந்து தாக்கியதுடன் இராணுவத்தினரும் வந்து அங்கிருந்தவர்களை அடித்தார்களாம்.

## ஊர்வலமும் கூட்டமும

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறையில் நடந்த பொலிஸ் தாக்குதலை ஆட்சேபித்து யாழ்ப்பாணத்தில் ஓர் ஊர்வலத்தையும், பொதுக்கூட்டத்தையும் நடத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் எதிர்க்கட்சி எம். பி.க்கள் சிலரும், எதிர்க்கட்சி செனட்டர்களும் கலந்துகொள்வார்களெனவும் தெரியவருகிறது.

## யுதாண்ட்-டட்லி பேச்சுவார்த்தை

### வியட்னும பிரச்னைபற்றி பரிசீலனை

கொழும்பு, ஞாயிறு

ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு யுதாண்ட் இன்று பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகாவுடன் சுமார் ஒருமணிநேரம் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். சர்வதேச விஷயங்கள் குறித்துப் குறிப்பாக வியட்னும் பிரச்னைகள் குறித்து அவர்கள் கருத்துப்பரிமாறிக் கொண்டனர். பிரதமர் புதிதாகத் தெரிவித்துள்ள தமது சமரச முயற்சிகளை யுதாண்டிடம் விளக்கியதாகவும் யுதாண்ட் தமது சொந்தத் திட்டத்தைப் பற்றி பிரதமரிடம் தெரிவித்ததாகவும் தெரிகின்றது. பிரதமர் டட்லி யுதாண்டுக்கு ஒரு விருந்துபசாரம் இன்று அளித்தார்.

யுதாண்ட் நாளை புதுடில்லிக்குப் புறப்பட்டுப் போவார். அங்கு அவர் ஏழு நாட்கள் தங்கியிருப்பார். 12-ந் திக அவருக்கு புதுடில்லியில் நேரு சமாதானப் பரிசு வழங்கப்படும்.

## காணிக்கச்சேரி

கிளிநொச்சி, ஞாயிறு

உணவு உற்பத்தி இயக்கத்தில் சிரத்தை காட்டும் உருத்திரபுரம், கிளிநொச்சி, இராமநாதபுரம் வாசிகளுக்கு எள்ளுக்காடு, கல்மடுப் பகுதியிலுள்ள காணிகள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 18ந்திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டுமெனவும், ஒரு கமக்காரனுக்கு இரண்டு ஏக்கர் காணி வழங்கப்படுமெனவும் தெரியவருகிறது.

## தமிழ் மொழி அமுல் விசேஷ கூட்டம

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ் மொழி நிர்வாக அமுல் சம்பந்தமாக ஆராய்வதற்காக யாழ். மாவட்ட இணைப்புக் கூட்டம் இம் மாதம் 11-ந்திகதி காலை 9-30 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவிருக்கிறது. இது சம்பந்தமாகஒரு விசேஷ கூட்டத்தை கூட்டும்படி கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.கா.பொ. இரத்தினம் அரசாங்க அதிபரைக் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குழாய் நீர்த் திட்டம்

### ஆராயப்படும்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டிக்குக் குழாய் மூலம் நீர் விநியோகம் செய்யவும், அத்துளுக்குளத்திட்டம் மூலம் நீர்ப்பாசன அபிவிருத்தி செய்யவும் அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்து அத்துளுக்குளம் குழாய் நீர்த்திட்டத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நீரியல் ஆராய்ச்சி நிபுணர்களடங்கிய கோஷ்டியொன்று இம் மாதம் கரவெட்டிக்கு விஜயம் செய்யவிருப்பதாக தெரிய வருகிறது.

நிபுணர்களின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்டால் 4இலட்சம்ரூபா செலவில் அத்துளுக்குளத்தில் குழாய் நீர்த் திட்டம் நிறுவப்படும்.

3-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருநாகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!

ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்

இரு வல்லவர்கள்

விற்பனைக்கு

கார்:

சோமசெற் E Y 9000 தொடர்பு இலக்க கார் விற்பனைக்குண்டு. யாவும் மிகச் சிறந்த நிலைமையில்உள்ளது. விபரங்களுக்கு செ. கனகராஜா [illegible] பாடசாலை வீதி, வல்வெட்டித்துறை. 2377

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org